# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2010 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, விதுரர்கள், அநாதைகள் ஓய்வூதியம் (திருத்தச்) சட்டம்

---

*(2010 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 17 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2010, ஓகத்து மாதம் 20 ஆந் தேதிய* ***இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்*** II *ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது*

---

*கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்*

***விலை : ரூபா 9.00*** ***தபாற் செலவு : ரூபா 10.00***

## *2010 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, விதுரர்கள், அநாதைகள் ஓய்வூதியம் (திருத்தச்) சட்டம்*

[*2010 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 17 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.*]

*ச.வ.ஓ. 60/2006*

### *1983 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, விதுரர்கள், அநாதைகள் ஓய்வூதியச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :*

*சுருக்கப் பெயர்.*

***1.*** *இச்சட்டம் 2010 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, விதுரர்கள், அநாதைகள் ஓய்வூதிய (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.*

*1983 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்கச் சட்டத்தில் 9அ மற்றும் 9ஆ என்னும் புதிய பிரிவுகளை உட்புகுத்துதல்.*

***2.*** *(இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1983 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, விதுரர்கள், அநாதைகள் ஓய்வூதியச் சட்டம் அச்சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவுகளை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :-*

*"அவசரகால ஒழுங்குவிதிகள் முதலியவற்றின் கீழ் தவறொன்றாக அமையும் ஏதேனும் செயல் காரணமாக இறக்கும் பகிரங்க அலுவலர்கள் முதலானோருக்கு ஓய்வூதியக் கொடுப்பனவு.*

*9அ. (1) இச்சட்டத்தின்கீழ் கழிப்பனவுகளுக்கு அமைவான எவரேனும் அலுவலர் அப்போதைக்கு வலுவிலுள்ள அவசரகால ஒழுங்குவிதிகளின்கீழ் தவறொன்றாக அமையும் ஏதேனும் செயலின் காரணமாக அல்லது ஏதேனும் இயற்கை அனர்த்தத்தின் காரணமாக அவரது ஓய்வுபெறும் வயதை அடையுமுன் இறக்குமிடத்து அத்தகைய அலுவலரின் விதுரரும் பிள்ளைகளும், இச்சட்டத்தின் வேறு எவையேனும் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும்-*

*(அ) அத்தகைய அலுவலர் இறந்த வேளையில் அவர் பெற்றுக்கொண்டிருந்த சம்பளத்தின் அடிப்படையில், அவர் உயிரோடிருந்திருப்பின் எந்தத் தேதியன்று அவரது ஓய்வுபெறும் வயதை அவர் அடைந்திருப்பாரோ அத்தேதி வரை இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்*

2-PL 005039 -1140 (2010/07)

கிணங்கக் கணக்கிடப்பட்ட ஓய்வூதிய மொன்றை அத்தகைய இறப்புத் தேதியிலிருந்து பெறுவதற்கும் ; அத்துடன்

(ஆ) எத்தேதியில் அவர் தனது ஓய்வுபெறும் வயதை அடைந்திருப்பாரோ அத்தேதியிலிருந்தும் அதன் பின்னரும் அவர் உயிரோடிருந்திருப்பின் அவரது ஓய்வு பெறும் வயதை அவர் அடையும் வரை அவர் எந்தச் சம்பள உயர்வுகளைப் பெறுவதற்கு உரித்துடையவராகவிருந் திருப்பாரோ அந்தச் சம்பள உயர்வுகள் எல்லாவற்றுடனும் மீளாய்வு செய்யப் பட்ட சம்பளத்தின் அடிப்படையில் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்கக் கணக்கிடப்பட்ட ஓய்வூதியமொன்றைப் பெறுவதற்கும்,

உரித்துடையோராதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் நோக்கத்திற்கென ஓய்வூதியத்தை கணக்கிடுகையில், ஓய்வுபெறும் வயதானது, சம்பந்தப்பட்ட அலுவலரின் இறப்பு சூழ்நிலைகள், அவரின் சேவைக்காலம் மற்றும் ஒவ்வொரு தனித்த விடயத்திற்கும் ஏற்புடையதான வேறேதேனும் விடய அளவிலான விபரங்களையும் கருத்திற்கொண்டு ஓய்வூதிய பணிப்பாளர் தலைமையதிபதியினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

(3) பெண்ணொருவராக இருப்பவரும் பகிரங்க சேவையில் தற்காலிக அல்லது அமய பதவி யொன்றை வகிக்கின்றவருமான ஆளெவரும் அவரது பதவியில் நிரந்தரமாக்கப்படுவதற்கு முன்னர் அவசரகால ஒழுங்குவிதிகளின்கீழ் தவறொன்றாக அமையும் ஏதேனும் செயலின்

காரணமாக அல்லது ஏதேனும் இயற்கை அனர்த் தத்தின் காரணமாகச் சேவையிலுள்ள போதே இறக்குமிடத்து, அத்தகைய ஆள் இக்கட்டளைச் சட்டத்தின் வேறு எவையேனும் ஏற்பாடுகள் எவ் வாறிருப்பினும், இச்சட்டத்தின் 9 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் எந்த அலுவலருக்கு ஏற்புடைத் தாகின்றதோ அந்த அலுவலர் ஒருவராக அவரது இறப்புத் தேதியிலிருந்து கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய ஆளின் விதுரரும் பிள்ளை களும் இச்சட்டத்தின் வேறு எவையேனும் ஏற்பாடு கள் எவ்வாறிருப்பினும் –

(அ) அத்தகைய ஆள் இறந்த வேளையில் அவர் பெற்றுக் கொண்டிருந்த கொடுப்பனவின் அடிப்படையில், அவர் உயிரோடிருந் திருப்பின் எத்தேதியன்று அவர் ஐம்பத் தைந்து வயதை அடைந்திருப்பாரோ அந்த தேதிவரை, இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக் கிணங்க கணக்கிடப்பட்ட ஓய்வூதிய மொன்றை அத்தகைய இறப்புத் தேதியிலி ருந்து பெறுவதற்கும் ; அத்துடன்

(ஆ) அவர் எந்தத் தேதியன்று ஐம்பத்தைந்து வயதை அடைந்திருப்பாரோ அந்தத் தேதியிலிருந்தும் அதன் பின்னரும் அவர் உயிரோடிருந்திருப்பின் ஐம்பத்தைந்து வயதை அடையும் வரை பெறுவதற்கு அவர் உரித்துடையவராகவிருந்திருக்கக் கூடியது மான சம்பள உயர்வுகள் எல்லாவற் றுடனுமான ஓய்வூதியமொன்றைப் பெறுவ தற்கும்,

உரித்துடையோராதல் வேண்டும்.

(4) மூன்றாம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எந்த ஆளுக்கு ஏற்புடைத்தாகின்றனவோ அந்த ஆளெ வரும் அவர் பகிரங்க சேவையில் சேர்ந்த தேதியிலி ருந்து இச்சட்டத்தின்கீழ் உதவுதொகை செலுத்துநர் ஒருவராகக் கருதப்படுதல் வேண்டும்.

(5) இச்சட்டத்தின் வேறு எவையேனும் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், இப்பிரிவின்கீழ் ஓய்வூதியம் வழங்கும் நோக்கத்திற்கு இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட அலுவலர்களும் இப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஆட்களும் அவர்கள் பகிரங்க சேவையிற் சேர்ந்த தேதியிலிருந்து உதவுதொகை செலுத்துநர்களாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் அவர்கள் இறக்கும் தேதியன்றுள்ளவாறு நிதியத்திற்கு வருமதியான உதவுதொகைகளை முழுமையாகச் செலுத்தியுள்ளதாகக் கருதப்படுதலும் வேண்டும்.

(6) இப்பிரிவின் நோக்கத்திற்கு –

"அவசரகால ஒழுங்குவிதி" என்பது, (40 ஆம் அத்தியாயமான) பொது மக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 5 ஆம் பிரிவின்கீழ் சனாதிபதியால் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதி என்று பொருள்படும் ;

"இயற்கை அனர்த்தம்" என்பது, 2005 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, இலங்கை அனர்த்த முகாமைத்துவச் சட்டத்திலுள்ள அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

ஓய்வூதியங்கள் பற்றிய குறிப்புகளின் அட்டவணை 'எட' என்பதில் குறிப்பீடு செய்யப்பட்ட அலுவலர்களின் விதுரர்களுக்கான ஓய்வூதியக் கொடுப்பனவு.

9ஆ. ஒன்பதாம் பிரிவின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும் –

(அ) ஓய்வூதியங்கள் பற்றிய குறிப்புகளின் அட்டவணை 'எட' என்பதில் குறித்துரைக்கப்பட்டவரும் ; அத்துடன்

(ஆ) ஐந்தாண்டு கால சேவையைப் பூர்த்தி செய்வதன்மீது ஓய்வூதியமொன்றுக்கு உரித்துடையவருமான,

எவரேனும் அலுவலரின் விதுரர் ஒருவர் அத்தகைய அலுவலரின் இறப்பின்மீது இச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க அத்தகைய அலுவலர் ஓய்வு பெறுவதன்மீது அவரால் பெறப்பட்ட சம்பளத்தின் அடிப் படையில் கணிப்பிடப்பட்ட ஓய்வூதியமொன்றைப் பெறுவதற்கு உரித்துடையவராதல் வேண்டும். அத்தகைய உதவுதொகைகளின் தொகை சேவையின் மொத்தக் காலப்பகுதிக்கு வட்டி யுடன் சேர்த்து திரட்டு நிதியத்திற்குச் செலுத் தப்படுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய உதவுதொகைகள் வட்டியுடன் சேர்த்துச் செலுத்தப்பட்டாலொழியவும் செலுத்தப்படும் வரையும் இப்பிரிவின் கீழ் ஓய்வூதியக் கொடுப்பனவு தொடங்குதல் ஆகாது."

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 12 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**3**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 12 ஆம் பிரிவு அதன் காப்புவாசகத்தில் "திருமணமாகாத பெண் அநாதை ஒருவர்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "பெண் அநாதை" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 18 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.*

**4**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 18 ஆம் பிரிவு இத்தால் நீக்கஞ்செய்யப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய பிரிவு இடப்படுகின்றது :-

*"விதுரர் மீள் திருமணம் செய்யும் பட்சத்தில் ஏற்பாடுகள்.*

18. (1) உதவுதொகை செலுத்துநர் ஒருவரின் விதுரர் அவர் மீள் திருமணம் செய்வதன்மீது அத்தகைய அடுத்துறு திருமணத்தின் பின்னர் ஓய்வூதியமாக -

(அ) அத்தகைய அடுத்துறு திருமணத்தின் நேரத்தில் அவர் பெற்று வந்த ஓய்வூதியத் தின் அரைவாசித் தொகையை ; அல்லது

(ஆ) அவர் ஓய்வூதியமொன்றைப் பெறுவதற்கு உரித்துடையவராக ஆனால் அதனை உள்ளவாறாகவே பெறாதவராக இருக்கு

மிடத்து அத்தகைய அடுத்துறு திருமணத்திற்கு முன்னர் ஒரு விதுரர் என்ற அவரது தன்மையில் அவர் பெறவிருந்த தொகையின் அரைவாசியை,

பெறுதல் வேண்டும்.

(2) விதுரரின் முதலாவது திருமணத்தின் பிள்ளைகள் (1) ஆம் உட்பிரிவின் (அ) அல்லது (ஆ) என்னும் பந்தியின் நியதிகளின்படி விதுரருக்குக் கொடுப்பனவு செய்யப்பட்ட பின்னர் விதுரரினால் பெறப்படும் ஓய்வூதியத்தின் எஞ்சிய பாகத்தைப் பெறுதல் வேண்டும்.

(3) அத்தகைய பின்னுறு திருமணத்தின் வாழ்க்கைத்துணை இச்சட்டத்தின்கீழ் உதவுதொகை செலுத்துநர் ஒருவராக இருக்குமிடத்தும் அத்துடன் அத்தகைய வாழ்க்கைத்துணையினால் ஓய்வூதியத்திற்குச் செய்யப்பட்ட உதவுதொகைகள் தொடர்பில் அத்தகைய வாழ்க்கைத்துணையின் இறப்பின்மீது ஓய்வூதியமொன்றைப் பெறுவதற்கு உரித்துடையவராக வருகின்றவிடத்தும் (1) ஆம் உட்பிரிவின் (அ) அல்லது (ஆ) என்னும் பந்தியின் நியதிகளின்படி ஓய்வூதியமாக அவர் பெற்றுக்கொண்டிருந்தவாறான அத்தகைய தொகையின் கொடுப்பனவு அத்தகைய அடுத்துறு திருமணத்தின் அத்தகைய வாழ்க்கைத்துணை இறக்கும் தேதியிலிருந்து முடிவுறுத்தப்படுதல் வேண்டும் :

ஆயினும் மேலே ஏற்பாடு செய்யப்பட்டவாறு ஓய்வூதியக் கொடுப்பனவு முடிவுறுத்தப்படுமிடத்து விதுரரின் முதலாவது திருமணத்தின் பிள்ளைகள் அவர்களின் தகப்பனின் அடுத்துறு திருமணத்தின் வாழ்க்கைத்துணை இறந்த தேதியிலிருந்து (2) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி அவர்கள் பெற்று

வந்த பங்கையும் அத்துடன் அத்தகைய முடிவுறுத் தலுக்கு முன்னர் (1) ஆம் உட்பிரிவின் நியதிகளின் படி அவர்களது தகப்பன் பெற்றுவந்த தொகையை யும் பெறுவதற்கு உரித்துடையவர்களாதல் வேண் டும் :

ஆயின் மேலும் அத்தகைய அடுத்துறு திருமணம் கலைக்கப்படும் பட்சத்தில் விதுரர் (1) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி அவர் பெற்ற அரைவாசிப் பங்கை ஓய்வூதியமாகப் பெறுவதற்கு உரித்துடையவராதல் வேண்டும் ; அத்துடன் (2) ஆம் உட்பிரிவின்கீழ் பிள்ளைகளின் உரித்து மாற்றப்படாமல் தொடர்ந்திருக்கிறது".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 25 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**5**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 25 ஆம் பிரிவு "ஓய்வூதிய மெதற்கும் உரித்துடையவராதலாகாது." என்னும் சொற்களுக்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப் படுகின்றது :

"ஓய்வூதியமெதற்கும் உரித்துடையவராதலாகாது :

ஆயின், எவ்வாறாயினும் பதவி ஒழிக்கப்படுவதன் காரணமாக உரிய காலத்துக்கு முன்னரே ஓய்வு வழங்கப் பெற்றிருந்தவரும் சட்டத்தால் தேவைப்படுத்தப்பட்டவாறு உதவுதொகையை செலுத்தாதொழிந்தவருமான உதவுதொகை செலுத்துநர் ஒருவரின் விடயத்தில் அத்தகைய உதவுதொகை செலுத்துநர் ஐம்பத்தைந்து வயதை அடையுமுன்னர் திருமண ஒப்பந்தம் ஒன்றை செய்துகொள்வாராயின் அவர், வருமதியான உதவுதொகை கள் முழுவதையும் அதன்மீதான வட்டியுடன் சேர்த்துச் செலுத்திய பின்னர் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க கணிப்பிடப்பட்ட ஓய்வூதியமொன்றைப் பெறுவதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 26அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.*

**6**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 26 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன் அது அச்சட்டவாக்கத்தின் 26அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :-

"உதவுதொகை செலுத்துநர் களாக இருப்பவர்களும் ஓய்வூதியமின்றி பகிரங்க சேவையை விட்டுச் செல்கின்ற வர்களுமான திருமணமான பகிரங்க அலுவலர் களுக்கு ஏற்புடையத் தான விசேட ஏற்பாடுகள்.

26அ. ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகை செலுத்துநர் ஒருவராக இருந்தவண்ணம் தமது கட்டாய ஓய்வுபெறும் வயதை அடையும் முன்னரே பத்தாண்டுகளைக் கொண்ட அல்லது அதற்கு மேற்பட்ட சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்து ஆனால் ஓய்வூதியமொன்றைப் பெறுவதற்கு தகுதிபெறாமல் பகிரங்க சேவையை விட்டுச் செல்லும் பகிரங்க அலுவலர் ஒருவர் ஓய்வூதியத் திட்டத்திற்கு அவரால் செலுத்தப்பட்ட உதவு தொகை முழுவதன் அல்லது பாகத்தின் மீளளிப் பொன்றுக்குத் தகுதியுடையவராதலாகாது. எவ்வாறாயினும், அத்தகைய பகிரங்க அலுவலரின் விதுரரும் அநாதைகளும், அவர் இறப்பதன்மேல், இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்கக் கணக்கிடப் பட்டதும், அவரினால் செலுத்தப்பட்ட உதவு தொகைகளின் மீதானதுமான ஓய்வூதியமொன் றைப் பெறுவதற்கு உரித்துடையோராதல் வேண் டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தில் 31அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

**7**. பின்வரும் புதிய பிரிவானது முதன்மைச் சட்டவாக்கத்தின் 31 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்னர் இத்தால் உட்புகுத்தப்படு கின்றதென்பதுடன் அது அச்சட்டவாக்கத்தின் 31அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்.

"ஒழுங்கு விதிகள்.

31அ. (1) அமைச்சரானவர், விதித்துரைக்கப்பட வேண்டுமென இச்சட்டத்தால் தேவைப்படுத்தப் பட்ட எல்லாக் கருமங்கள் தொடர்பிலும் அல்லது இச்சட்டத்தின்கீழ் எது தொடர்பில் ஒழுங்குவிதிகள் ஆக்கப்படவேண்டுமென அதிகாரமளிக்கப்படு கின்றதோ அது தொடர்பில் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

(2) அமைச்சரால் ஆக்கப்படும் ஒழுங்குவிதிகள் ஒவ்வொன்றும் வர்த்தமானியில் வெளியிடப்படு தல் வேண்டுமென்பதுடன் அத்தகைய வெளியீட் டுத் திகதியன்று அல்லது அதில் குறித்துரைக்கப் பட்டவாறான அத்தகைய பிந்திய திகதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(3) ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் வர்த்தமானியில் வெளியிடப்பட்டபின்னர் வசதியானவரை விரைவாக அங்கீகாரத்திற்கென பாராளுமன்றத்தின் முன் கொணரப்படுதல் வேண்டும் . அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஏதேனும் ஒழுங்குவிதி, அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி, அங்கீகாரமறுப்புத் திகதியிலிருந்து நீக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) அமைச்சரால் ஆக்கப்படும் ஏதேனும் ஒழுங்குவிதி நீக்கப்பட்டு விட்டதாகக் கருதப்படும் திகதி பற்றிய அறிவிப்பு வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

*இச்சட்டம் நடைமுறைக்கு வரும் தேதிக்கு முன்னர் இறந்துள்ள ஆட்களுக்கு முதன்மைச் சட்டவாக்கத்தின் பிரிவு 9அ என்பதன் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாதல்.*

**8.** (1) பிரிவு 9அ என்பதன் (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகை செலுத்துநர் ஒருவராக இருந்தவரும் இச்சட்டம் நடைமுறைக்கு வரும் தேதிக்கு முன்னர் மேற்கூறப்பட்ட உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட சூழ்நிலைகளின் கீழ் இறந்திருந்தவருமான எவரேனும் பகிரங்க அலுவலரின் விதுரருக்கும் பிள்ளைகளுக்கும் ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(2) பிரிவு 9அ என்பதன் (3) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் பெண்ணொருவராயிருக்கின்றவரும் பகிரங்க சேவையில் தற்காலிக அல்லது அமய பதவியொன்றை வகித்திருந்தவரும் இச்சட்டம் நடைமுறைக்கு வரும் தேதிக்கு முன்னர் (3) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட சூழ்நிலைகளின்கீழ் சேவையிலிருக்கும்போது இறந்திருந்தவருமான எவரேனும் ஆளின் விதுரருக்கும் பிள்ளைகளுக்கும் ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(3) இப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எந்த ஆளுக்கு ஏற்புடைத்தாகின்றனவோ அந்த ஆளெவரும் முதன்மைச் சட்டவாக்கத்தின்கீழ் உதவுதொகை செலுத்துநர் ஒருவராகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) இப்பிரிவின் (1) ஆம், (2) ஆம் உட்பிரிவுகளின்கீழ் ஓய்வூதிய மளிக்கும் நோக்கத்திற்கு இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட அலுவலர்களும் (2) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஆட்களும் அத்தகைய ஒவ்வோராளும் இறக்கும் தேதியன்றுள்ளவாறு ஓய்வூதியத் திட்டத்திற்கு அவர்களிடமிருந்து வருமதியான எல்லா உதவுதொகைகளையும் முழுமையாகச் செலுத்தியுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

*உரிமைக் கோரிக்கைகள் பணிப்பாளர் தலைமை யதிபதிக்குச் செய்யப்படுதல்.*

**9**. இச்சட்டத்தின் 8 ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட எவரேனும் அலுவலரின் அல்லது ஆளின், விடயத்திற்கேற்ப, எவரேனும் விதுரன் அல்லது ஏதேனும் பிள்ளை அல்லது எவையேனும் பிள்ளைகள் அமைச்சரால் வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளையால் நியமிக்கப்படவுள்ள தேதியன்று அல்லது அதற்கு முன்னர் தங்கள் உரிமைக்கோரிக்கைகளை ஓய்வூதியங்கள் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு பணிப்பாளர் தலைமையதிபதியால் விதித்துரைக்கப்படவுள்ள படிவமொன்றில் அனுப்புதல் வேண்டும்.

*கடந்த காலத்தை உள்ளடக்கும் பயன்.*

**10**. இச்சட்டத்தின் பிரிவுகள் 4, 5 அத்துடன் 6 என்பவற்றின் ஏற்பாடுகள் முதன்மைச் சட்டவாக்கம் நடைமுறைக்கு வந்த தேதியிலிருந்து நடைமுறைக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**11**. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்குமிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்